ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாதா$_2$ர்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா$_3$ந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸதா$_3$ ஹ்ரு'தி$_3$ ॥

நம்மாழ்வார் அருளிச்செய்த

# ॥ சன்மம் பலபல ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ சன்மம் பலபல ॥

திருமால்சீர் பரவப்பெற்ற எனக்கு ஒரு குறையும் இல்லை எனல்

‡சன்மம் பல பல செய்து வெளிப்பட்டுச்⋆
சங்கொடு சக்கரம் வில்⋆
ஒண்மை உடைய உலக்கை ஒள் வாள்⋆
தண்டு கொண்டு புள் ஊர்ந்து⋆ உலகில்
வன்மை உடைய அரக்கர்⋆ அசுரரை
மாளப் படை பொருத⋆
நன்மை உடையவன் சீர் பரவப் பெற்ற⋆
நான் ஓர் குறைவிலனே (1)

குறைவில் தடங்கடல் கோள் அரவேறித்⋆ தன்
கோலச் செந்தாமரைக்கண்⋆
உறைபவன் போல ஓர் யோகு புணர்ந்த⋆ ஒளி மணி
வண்ணன் கண்ணன்⋆
கறையணி மூக்குடைப் புள்ளைக் கடாவி⋆ அசுரரைக்
காய்ந்த அம்மான்⋆
நிறை புகழ் ஏத்தியும் பாடியும் ஆடியும்⋆
யான் ஒரு முட்டிலனே (2)

முட்டில் பல் போகத்தொரு தனி நாயகன்⋆
மூவுலகுக்குரிய⋆
கட்டியைத் தேனை அமுதை⋆ நன் பாலைக்
கனியைக் கரும்பு தன்னை⋆
மட்டவிழ் தண்ணந் துழாய் முடியானை
வணங்கி⋆ அவன் திறத்துப்
பட்ட பின்னை⋆ இறையாகிலும்⋆ யான் என்
மனத்துப் பரிவிலனே (3)

www.prapatti.com

பரிவின்றி வாணனைக் காத்தும் என்று⋆
அன்று படையொடும் வந்தெதிர்ந்த⋆
திரி புரம் செற்றவனும் மகனும்⋆ பின்னும்
அங்கியும் போர் தொலைய⋆
பொரு சிறைப் புள்ளைக் கடாவிய⋆
மாயனை ஆயனைப் பொற் சக்கரத்-
தரியினை⋆ அச்சுதனைப் பற்றி⋆ யான்
இறையேனும் இடர் இலனே (4)

இடர் இன்றியே ஒரு நாள் ஒரு போழ்தில்⋆ எல்லா
உலகும் கழிய⋆
படர் புகழ்ப் பார்த்தனும் வைதிகனும்⋆ உடன் ஏறத்
திண் தேர் கடவி⋆
சுடர் ஒளியாய் நின்ற தன்னுடைச் சோதியில்⋆
வைதிகன் பிள்ளைகளை⋆
உடலொடும் கொண்டு கொடுத்தவனைப் பற்றி⋆
ஒன்றும் துயர் இலனே (5)

துயரில் சுடர் ஒளி தன்னுடைச் சோதி⋆
நின்ற வண்ணம் நிற்கவே⋆
துயரில் மலியும் மனிசர் பிறவியில்⋆
தோன்றி கண் காண வந்து⋆
துயரங்கள் செய்து தன் தெய்வநிலை உலகில்⋆
புக உய்க்கும் அம்மான்⋆
துயரம் இல் சீர்க் கண்ணன் மாயன் புகழ் துற்ற⋆
யான் ஓர் துன்பம் இலனே (6)

துன்பமும் இன்பமும் ஆகிய⋆ செய்வினையாய்
உலகங்களுமாய்⋆
இன்பமில் வெந்நரகாகி⋆ இனிய நல் வான்
சுவர்க்கங்களுமாய்⋆
மன் பல் உயிர்களும் ஆகிப்⋆ பல பல
மாய மயக்குக்களால்⋆



www.prapatti.com

இன்புறும் இவ்விளையாட்டுடையானைப் பெற்று⋆
ஏதும் அல்லல் இலனே (7)

அல்லலில் இன்பம் அளவிறந்தெங்கும்⋆
அழகமர் சூழ் ஒளியன்⋆
அல்லி மலர் மகள் போக மயக்குக்கள்⋆
ஆகியும் நிற்கும் அம்மான்⋆
எல்லையில் ஞானத்தன் ஞானம் அஃதே கொண்டு⋆
எல்லாக் கருமங்களும் செய்⋆
எல்லையில் மாயனைக் கண்ணனைத் தாள் பற்றி⋆
யான் ஓர் துக்கம் இலனே (8)

துக்கமில் ஞானச் சுடர் ஒளி மூர்த்தி⋆
துழாய் அலங்கல் பெருமான்⋆
மிக்க பல் மாயங்களால் விகிர்தம் செய்து⋆
வேண்டும் உருவு கொண்டு⋆
நக்க பிரானோடயன் முதலாக⋆ எல்லாரும்
எவையும்⋆ தன்னுள்
ஒக்க ஒடுங்க விழுங்க வல்லானைப் பெற்று⋆
ஒன்றும் தளர்விலனே (9)

தளர்வின்றியே என்றும் எங்கும் பரந்த⋆
தனிமுதல் ஞானம் ஒன்றாய்⋆
அளவுடை ஐம் புலன்கள் அறியாவகையால்⋆
அருவாகி நிற்கும்⋆
வளர் ஒளி ஈசனை மூர்த்தியைப்⋆ பூதங்கள்
ஐந்தை இரு சுடரை⋆
கிளர் ஒளி மாயனைக் கண்ணனைத் தாள் பற்றி⋆
யான் என்றும் கேடிலனே (10)

‡கேடில் விழுப் புகழ்க் கேசவனைக்⋆
குருகூர்ச் சடகோபன் சொன்ன⋆
பாடல் ஓர் ஆயிரத்துள்⋆ இவையும் ஒரு பத்தும்
பயிற்ற வல்லார்கட்கு⋆ அவன்



www.prapatti.com

நாடு நகரமும் நன்குடன் காண⋆
 நலனிடை ஊர்தி பண்ணி⋆
வீடும் பெறுத்தித் தன் மூவுலகுக்கும் தரும்⋆
 ஒரு நாயகமே (11)

∥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ∥

www.prapatti.com